இயக்கம்...

கோவில்பாளையம் கேஎம்சிஹெச் மருத்துவமனையில் உலக கை சுகாதார தினத்தையொட்டி கையொப்ப இயக்கத்தை தொடங்கிவைக்கிறார் மருத்துவமனையின் தலைவர் நல்ல ஜி.பழனிசாமி. உடன், மருத்துவர் சுவாமிநாதன், அரவிந்தன் நர்ஸிங் ஹோம் மருத்துவமனையின் இயக்குநர் விமல்குமார், துணைத் தலைவர் ரஞ்சித், பொது மேலாளர் சோமசுந்தரம், ஆலோசகர் தினமணி உள்ளிட்டோர்.

நிலத் தகராறில் பொய் வழக்கு: எஸ்.பி.அலுவலகம் முன் குடும்பத்தினருடன் பெண் தர்னா

கோவை, மே 7: நிலத் தகராறு தொடர்பாக தன் மீது பொய் வழக்குப் பதிவு செய்த காவல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வியாழக்கிழமை பெண் தர்னாவில் ஈடுபட்டார்.

கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் முன் வியாழக்கிழமை தர்னாவில் ஈடுபட்டோர்.

திருப்பூர் மாவட்டம், தெக்கலூர் ஆசிரியர் காலனியைச் சேர்ந்த சித்ரா (34) மற்றும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் என 10-க்கும் மேற்பட்டோர் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு வந்தனர். அவர்கள் திடீரென தர்னாவில் ஈடுபட்டனர்.பின்னர், அவர்களிடம் போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தினர். சமாதானமான பிறகு காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சித்ரா அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

கோவை மாவட்டம், கணியூர் கிராமத்தில் எனக்குச் சொந்தமான நிலம் தொடர்பாக நீதிமன்றங்களில் சிவில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில், கடந்த ஏப்ரல் 24-ஆம் தேதி ராஜேந்திரன் மற்றும் ஜீவானந்தம் ஆகியோரின் தூண்டுதலின்பேரில், சிலர் எனது நிலத்துக்குள் புகுந்து அங்கிருந்தவர்களை தாக்கி, கண்காணிப்பு கேமரா உள்ளிட்ட பொருள்களை சேதப்படுத்தியதோடு, எரிவாயு உருளையையும் திருடிச் சென்றனர்.

இதுகுறித்து நாங்கள் அளித்த புகாரை ஏற்காமல், எதிர்த் தரப்பினர் அளித்த பொய் புகாரின்பேரில் எங்கள் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். மேலும், ஏப்ரல் 30-ஆம் தேதி வேறொரு நபருடன் தகராறில் ஈடுபட்டதாக கூறி என் மீதும்,எனது சகோதரர்கள் கதிர்வேல், அல்லிமுத்து, உறவினர் கிரிஜா ஆகியோர் மீது மற்றொரு பொய் வழக்கு பதியப்பட்டுள்ளது. ஆனால், நாங்கள் தகராறில் ஈடுபட்டதாக கூறும் நாளில் எனது மாமனார் மறைவு தொடர்பான காரியங்களுக்காக நாங்கள் மேட்டுப்பாளையம் சென்றிருந்தோம். நாங்கள் அந்த இடத்துக்கே செல்லாத நிலையில், திட்டமிட்டு எங்கள் மீது தொடர்ச்சியாக பொய் வழக்குகள் பதியப்பட்டு வருகின்றன.

எனவே,உண்மைக்குப் புறம்பாக வழக்குப் பதிவு செய்த காவல் அதிகாரிகள் மீது துறைரீதியான விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட 27 வடமாநிலத் தொழிலாளர்கள் மீட்பு

சொந்த ஊருக்கு அனுப்ப நடவடிக்கை

கோவை, மே 7: கோவை மாவட்டம், மலுமிச்சம்பட்டியில் உள்ள தனியார் வார்ப்பகத்தில் கொத்தடிமைகளாக வேலை பார்த்து வந்த 5 சிறுவர்கள் உள்ளிட்ட 27 வடமாநிலத் தொழிலாளர்களை வருவாய்த் துறையினர் மீட்டனர்.

கோவை மாவட்டம், மலுமிச்சம்பட்டி பகுதியில் செயல்பட்டு வரும் தனியார் வார்ப்பக நிறுவனத்தில், பிகாரை சேர்ந்த தொழிலாளர்கள் ஊதியமின்றியும், அடிப்படை வசதிகளின்றியும் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக பெங்களூருவைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்துக்கு தகவல் கிடைத்தது.

இது குறித்து கோவை தெற்கு வருவாய் கோட்டாட்சியர் ஆர். மாருதி பிரியாவுக்கு அளிக்கப்பட்ட புகாரின்பேரில், வருவாய்த் துறையினர், தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மற்றும் செட்டிபாளையம் போலீஸார் சம்பந்தப்பட்ட தொழிற்சாலையில் வியாழக்கிழமை சோதனை நடத்தினர். இதில் அங்கு கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட 5 சிறுவர்கள் உள்பட 27 பேர் மீட்கப்பட்டனர்.

இதுகுறித்து வருவாய் கோட்டாட்சியர் மாருதி பிரியா செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பிகாரை சேர்ந்த ஒப்பந்ததாரர் மூலம் மாதம் ரூ.12,000 ஊதியம் தருவதாகக் கூறி அழைத்து வரப்பட்ட இந்தத் தொழிலாளர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை. அவர்கள் தங்கியிருந்த இடத்தை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்படாமல் வாரத்தின் அனைத்து நாள்களும் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்பட்டனர். மேலும்,போதிய உணவு வழங்கப்படாமலும், வேலைக்குச் செல்ல மறுப்பவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதும் விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட தொழிலாளர்கள் தற்போது பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உதவிகளை மாவட்ட நிர்வாகம் செய்து வருகிறது என்றார்.

இதனிடையே, விதிகளை மீறி தொழிலாளர்களை கொடுமைப்படுத்திய தொழிற்சாலை நிர்வாகம் மற்றும் பிகாரை சேர்ந்த ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வருவாய்த் துறையினர் செட்டிபாளையம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில், கொத்தடிமைத் தொழிலாளர் முறை ஒழிப்புச் சட்டம், குழந்தைத் தொழிலாளர் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மீட்கப்பட்ட சிறுவர்களிடம் குழந்தைகள் நலக் குழுவினர் விசாரணை நடத்திய பிறகு, அனைத்துத் தொழிலாளர்களும் ஓரிரு நாள்களில் அவர்களது சொந்த ஊருக்குப் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்படுவார்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முதுமலை புலிகள் காப்பகத்தில் புலிகள் கணக்கெடுப்பு தொடக்கம்

முதுமலை புலிகள் காப்பகத்தில் மாமிச உண்ணிகள் கணக்கெடுப்பில் தடயங்களை மதிப்பீடு செய்யும் களப் பணியாளர்கள்.

கூடலூர், மே 7: முதுமலை புலிகள் காப்பக வனத்தில் பருவமழைக்கு முந்தைய புலிகள் உள்ளிட்ட மாமிச உண்ணிகள் கணக்கெடுப்பு வியாழக்கிழமை தொடங்கியது.

நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பக வனத்தில் பருவமழைக்கு முந்தைய புலிகள் உள்ளிட்ட மாமிச உண்ணிகள் கணக்கெடுப்பு வியாழக்கிழமை தொடங்கி மே 11-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, இந்த கணக்கெடுப்பில் வன விலங்குகளின் வாழ்விடங்களை மதிப்பீடு செய்தல், கண்காணிப்பு பணிகள் நடைபெற்றன.

தெப்பக்காடு, கார்குடி, முதுமலை, நெலாக்கோட்டை ஆகிய வனச்சரகங்களில் நடைபெறும் இந்த கணக்கெடுப்பு பணியில் முன்களப் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நரசிம்மநாயக்கன்பாளையத்தில் லேப் டெக்னீஷியன் தற்கொலை

பெ.நா.பாளையம், மே 7: நரசிம்மநாயக்கன்பாளையத்தில் லேப் டெக்னீஷியன் தற்கொலை செய்து கொண்டது குறித்து போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டத்தில் உள்ள கக்குச்சி கிராமத்தைச் சேர்ந்தவர் கிஷ்மு (38). லேப் டெக்னீஷியன். இவரது மனைவி பிரியங்கா (29). இருவருக்கும் கடந்த 2021-இல் திருமணம் நடைபெற்றது.

இவர்கள் கோவை மாவட்டம், நரசிம்மநாயக்கன்பாளையத்தில் உள்ள சூர்யா நகரில் வாடகை வீட்டில் வசித்து வருகின்றனர். திருமணமாகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை என கிஷ்மு மனம் வருந்திய நிலையில் இருந்துள்ளார். இந்நிலையில், இவர் புதன்கிழமை இரவு மது அருந்தியபடி குழந்தை இல்லையே என்ற ஏக்கத்துடன் புலம்பியுள்ளார். பின்னர் வீட்டு உரிமையாளரான லீலாவதிக்கு துணையாக அவரது வீட்டுக்கு பிரியங்கா உறங்க சென்றுவிட்டார்.

பின்னர் வியாழக்கிழமை காலை வீட்டுக்கு வந்து கணவர் படுத்திருந்த அறையை திறக்க முயன்றுள்ளார். ஆனால் உள்புறமாக தாழிட்டிருந்ததால் கதவை திறக்க முடியவில்லை. பின்னர் ஜன்னல் வழியாக பார்த்த போது கிஷ்மு, மின்விசிறி கொக்கியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது.

இதுகுறித்து பெரியநாயக்கன்பாளையம் காவல் நிலையத்துக்கு பிரியங்கா தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸார் கிஷ்முவின் உடலை மீட்டு கூறாய்வுக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும், இது குறித்து வழக்குப் விசாரணை நடத்து வருகின்றனர்.

சூறாவளி காற்றுடன் கனமழை: 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைகள் சேதம்

கோபி, மே 7: கோபி அருகே புதன்கிழமை இரவு சூறாவளிக் காற்றுடன் பெய்த கனமழை காரணமாக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து சேதமடைந்தன.

ஈரோடு மாவட்டம், கோபி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான சிறுவலூர், மல்லநாயக்கனூர், வெள்ளாங்கோவில், கொளப்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் புதன்கிழமை இரவு பலத்த சூறாவளிக் காற்றுடன் கனமழை பெய்தது. ஒரு மணி நேரத்துக்கும் மேலாக பெய்த மழையால் விவசாய நிலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

கோபி அருகே கொரவம்பாளையத்தில் கனமழையால் முறிந்து சேதமடைந்த வாழை மரங்கள்.

மேலும், பலத்த சூறாவளிக் காற்று வீசியதில் சிறுவலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சாகுபடி செய்து அறுவடைக்கு தயாராக இருந்த 5ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழைமரங்கள் முறிந்து சேதமாகின.

ஏக்கருக்கு ரூ.3 லட்சம் வரை முதலீடு செய்து வாழை சாகுபடியை செய்திருந்த விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

வாழைமரங்கள் முறிந்து சேதமானது குறித்து சம்பந்தப்பட்ட துறையினரிடம் விவசாயிகள் தெரிவித்தபோது, கூட்டுறவு சங்கங்களில் கடன் பெற்றிருந்து காப்பீடு செய்திருந்தால் மட்டுமே நிவாரணம் கிடைக்கும் என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் கம்பி வேலி அமைப்பு

அவிநாசி, மே 7: ஊத்துக்குளி வெற்றிவேலாயுத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் பொதுமக்கள் பாதை எனக் கூறி எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அந்த நிலத்தில் வியாழக்கிழமை கம்பி வேலி அமைக்கப்பட்டது.

ஊத்துக்குளி வெற்றிவேலாயுத சுவாமி கோயிலுக்குச் சொந்தமான 14.74 ஏக்கர் புஞ்சை நிலத்தில் மரம் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், நிலத்தைப் பாதுகாக்க கடந்த ஆகஸ்ட் 29-ஆம் தேதி கம்பி வேலி அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. அப்போது, தெற்கு பகுதியில் 590 அடியில் அப்பகுதி மக்கள் மக்கள் பாதை கேட்டு எதிர்ப்பு தெரிவித்தனர். இந்நிலையில், கம்பி வேலி அமைக்க தடுக்கப்பட்ட தெற்கு பகுதியில் இந்து சமய அறநிலையத் துறை, வருவாய்த் துறையினர் முன்னிலையில் வியாழக்கிழமை கம்பி வேலி அமைக்கப்பட்டது.

பஞ்சாப் நேஷனல் வங்கி
punjab national bank

வட்ட அலுவலகம், கந்தா என்கிளேவ், எண்.179, சரோஜினி வீதி, ராம்நகர், கோயம்புத்தூர் – 641 009.
போன் : 0422 2238839. இ-மெயில் : cocoimrec@pnb.bank.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏலத்திற்கான பொது அறிவிப்பு : 26.05.2026 தேதி அன்று

(காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை)

முன்வைப்புத் தொகை மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசித் தேதி மற்றும் நேரம் : 26.05.2026 தேதி அன்று, மாலை 3.00 மணி வரை

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

பஞ்சாப் நேஷனல் வங்கியின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகையை, கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோரிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/ஈடுவைக்கப்பட்ட ஆக்கபூர்வ / கொள்நிலை / அடையாள சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி', 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்' விற்கப்படும். சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே பட்டியலில் உள்ள விபரப்படியாகும்.

பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கிய வங்கிக்குத் தெரியவந்த ஏதேனும் வில்லங்கங்கள் குறித்த விபரம் : **கோயம்புத்தூர், ஆவணங்கள் நடுவர் நீதிமன்றத்தின் துணைப் பதிவாளரிடமிருந்து 3 அட்டாச்மெண்ட் உத்தரவுகள்**

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் அட்டவணை

லாட் எண்.	கிளையின் பெயர் மற்றும் கணக்கின் பெயர் மற்றும் கடன்தாரர்/ உத்தரவாதமளித்தவர் பெயர் மற்றும் விலாசம்	பிணையப்பட்ட அசையாச் சொத்து விபரம் / உரிமையாளரின் பெயர் (சொத்தின் அடமானதாரர்/கள்)	அ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(2)ன் படியான கேட்பு அறிவிப்பு தேதி ஆ) நிலுவைத் தொகை இ) 2002 சர்பாசி சட்டத்தின் பிரிவு 13(4)ன் படியான சுவாதீனம் எடுத்த தேதி ஈ) சுவாதீனத்தின் தன்மை அடையாளம் /கொள்நிலை/ ஆக்கபூர்வ சுவாதீனம்	1) ரிசர்வ் விலை 2)முன்வைப்புத் தொகை (EMD) 3) ஏல மடங்குத் தொகை
1	**கிளை : RS புரம் (ID 525910)** **திரு.M.சின்னதம்பி** **கடன்தாரர் மற்றும் சார் கடன்தாரர் :** **திரு.M.சின்னதம்பி,** த/பெ.திரு.முனியசாமி, 220, குரும்பர் சந்து, MNG வீதி, கோயமுத்தூர் – 641001 **மேலும் :** கதவு எண்.79, தாசே கவுண்டர் சந்து, MNG வீதி, தியாகி குமரன் வீதி, கோயமுத்தூர் – 641001, **சார்–கடன்தாரர் :** **திருமதி.C.மல்லிகா,** க/பெ.திரு.M.சின்னதம்பி, 220, குரும்பர் சந்து, MNG வீதி, கோயமுத்தூர் – 641001, **மேலும் :** கதவு எண்.79, தாசே கவுண்டர் சந்து, MNG வீதி, தியாகி குமரன் வீதி, கோயமுத்தூர் – 641001	**(அட்டவணைச் சொத்து) :** **திரு.M.சின்னதம்பி பெயரிலுள்ள சொத்து.** **(PAN:AKGPC9236Q):** கோயமுத்தூர் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் சார் பதிவு மாவட்டம், கோயமுத்தூர் தாலுகா, கோயமுத்தூர் டவுன் சர்வே எண்.7/2486ல் அடங்கியதும் அதன் பகுதியுமான நிலம், தாசையன் வீதியில் 1312 சதுர அடி மொத்த விஸ்தீரணம் உடையதாகும். **இதன் எல்லைகள் :** தீனாசிங் கோனார் பிறவிடை, பவானிசிங் மற்றும் பிறருக்குச் சொந்தமான பிறவிடை, கிழமேல் ரோடு ஆகியவற்றுக்கு தெற்கு, சண்முகத்துக்குச் சொந்தமான வீட்டுக்குக் கிழக்கு, 3 அடி அகல தென்வடல் தடம், மருதாசலம் செட்டியாருக்குச் சொந்தமான வீட்டுக்கு மேற்கு, தாசே கவுண்டர் சந்துக்கு வடக்கு. இதன் நடுவே வடபுறம் கிழமேல் 21 அடி 9 அங்குலம், தென்புறம் கிழமேல் 24 அடி 6 அங்குலம், கிழபுறம் தென்வடல் 52 அடி 6 அங்குலம், மேல்புறம் தென்வடல் 51 அடி 6 அங்குலம் மேலும் வடகிழக்குக் குறுக்கு 4 அடி 9 அங்குலம் ஆக மொத்தம் 1312 சதுர அடி (அல்லது) 3 சென்ட் 5 சதுர அடி காலி நிலத்திலுள் தென்புற பங்கிலுள்ள சொத்தின் **எல்லைகளும், அளவுகளும் கீழ் வருமாறு :** தாசே கவுண்டர் சந்துக்கு வடக்கு, L.கிரேசி சித்ரா மற்றும்	அ) 10.09.2024 ஆ) ரூ.7,18,620/– 28.02.2026 தேதி வரை (மற்றும் 28.02.2026 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) (கணக்கு எண்.0289300363877) ரூ.3,98,811/– 28.02.2026 தேதி வரை (மற்றும் 28.02.2026 தேதியிலிருந்து பின்வட்டி மற்றும் பிற செலவுகள்) கணக்கு எண். 0289300365109) ஆக மொத்தம் ரூ.11,17,431/– (ரூபாய் பதினோரு லட்சத்து பதினேழாயிரத்து நானூற்று முப்பத்து ஒன்று மட்டும்) இ) 06.12.2024 ஈ) அடையாளம்	1) ரூ.66,56,000/– (ரூபாய் அறுபத்து ஆறு லட்சத்து ஐம்பத்து ஆறாயிரம் மட்டும்) 2) ரூ.6,65,600/– (ரூபாய் ஆறு லட்சத்து அறுபத்து ஐந்தாயிரத்து அறுநூறு மட்டும்) 3) ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) **மின் ஏலத் தேதி மற்றும் நேரம் :** **26.05.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை**
	D.வசந்தமணியின் மீத சொத்துக்கு தெற்கு, சண்முகத்துக்குச் சொந்தமான வீட்டுக்குக் கிழக்கு, 3 அடி அகல தடம் மற்றும் L.கிரேசி சித்ரா மற்றும் D.வசந்தமணியின் மீத சொத்துக்கு மேற்கு. **குறிப்பு : 1. மதிப்பீட்டின்படி, கட்டிடம் அங்கீகாரம் பெறவில்லை. 2. வில்லங்கம் – கோயம்புத்தூர், ஆவணங்கள் நடுவர் நீதிமன்றத்தின் துணைப் பதிவாளரிடமிருந்து அட்டாச்மெண்ட் உத்தரவுகள்.** **அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.999029 / 76.953445**			

மின்–ஏலத்திற்கான நிபந்தனை விபரங்கள்

இவ்விற்பனையானது பிணைய நலன் (அமலாக்க) விதிகள் 2002ல் சொல்லப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் கீழ்க் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.
1. சொத்துக்கள் 'எங்குள்ளதோ அங்கு', 'என்ன உள்ளதோ அது' மற்றும் 'உள்ளதுள்ளவாறே' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிணையச் சொத்தின் விவரங்கள் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் நன்கு அறிந்த வகையில் சரியானது, எனினும் அதில் காணப்படும் எந்த ஒரு தவறு, விடுதல் மற்றும் திருத்தத்துக்குப் பொறுப்பாக மாட்டார்.
3. விற்பனையானது கீழே ஒப்பமிட்டுள்ள அலுவலரால் https://baanknet.com இணையதளத்தில் உள்ள மின் ஏல மேடையில் **26.05.2026 (செவ்வாய்க்கிழமை) ; காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை** நடத்தப்பெறும்.
4. விற்பனை தொடர்பான மேலும் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கீழ்க் குறிப்பிட்டுள்ள இணைய தளங்களைக் காணவும்.
https://baanknet.com & www.pnbindia.in

தேதி : 07.05.2026
இடம் : கோயமுத்தூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
பாதுகாக்கப்பட்ட கடன் வழங்கியவர்
பஞ்சாப் நேஷனல் வங்கி

சர்பாசிச்சட்டம் 2002ன் கீழ் விதி 8(6)–ன் படியான சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

பிராந்திய அலுவலகம்
கோயம்புத்தூர்

அசையாச் சொத்துக்கள் விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

(2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6)ன் கீழ் வழங்கப்பட்டது)

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான 30 நாள் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியில் அடமானம் வைக்கப்பட்ட / ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் (கடன் வழங்கியவர்), அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் **26.05.2026** அன்று விற்பனை செய்யப்படுகிறது. சொத்திற்கான குறைந்தபட்ச விலை மற்றும் முன் வைப்புத் தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரப்படியாகும்.

1. சொக்கம்பாளையம் கிளை (1189) : கடன்தாரர்(கள்) & உத்தரவாதமளித்தவர்(கள்) : திரு. மனோஜ்குமார் சண்முகம், த/பெ சண்முகம், **திருமதி. நந்தினி R,** த/பெ ரவி/க/பெ திரு. மனோஜ்குமார், எண்.800, குட்டை தோட்டம், குப்பனூர், கோயம்புத்தூர் – 641653. எண்.74, காமிதேமில்லத் தெரு, புன்செய்புளியம்பட்டி, சத்தியமங்கலம், ஈரோடு, தமிழ்நாடு – 638 459. **திருமதி. உமாதேவி சண்முகம் (உத்தரவாதமளித்தவர்),** க/பெ. சண்முகம், எண்.800, குட்டை தோட்டம், குப்பனூர், கோயம்புத்தூர் – 641 653. எண்.74, காமிதேமில்லத் தெரு, புன்செய்புளியம்பட்டி, சத்தியமங்கலம், ஈரோடு, தமிழ்நாடு – 638 459.
நிலுவைத் தொகை : ரூ.19,18,748.33 07.05.2026 வரை மற்றும் **08.05.2026** தேதியிலிருந்து பின் வட்டி, கட்டணங்கள் மற்றும் பிற செலவுகள்.
சொத்து விபரம் : சொத்து ID : IOBA1189004 கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் சார் பதிவு மாவட்டம், அன்னூர் தாலுகா, ஒட்டர்பாளையம் கிராம க.ச. எண்.149/1E1Bயில் உள்ள 2282 சதுர அடி அல்லது 5 சென்ட் 102 சதுர அடி நிலமும் அதில் கட்டப்பட்டு வரும் கட்டடமும் சேர்ந்த சொத்தின் **எல்லைகள் : இனம்–1, மொத்தம் 1500 சதுரடி :** 30 அடி அகல கிழமேல் லேஅவுட் ரோட்டுக்கு வடக்கு, சர்வே எண்.142/1A1 ல் உள்ள நிலச் சொத்துக்குத் தெற்கு, மனை எண்.3 க்குக் கிழக்கு, மனை எண்.5 க்கு மேற்கு. **அளவுகள் :**கிழமேல் வடபுறம் 30 அடி, கிழமேல் தென்புறம் 30 அடி, தென்வடல் கிழபுறம் 50 அடி, தென்வடல் மேல்புறம் 50 அடி.
அட்ச ரேகை : 11.235384, தீர்க்க ரேகை : 77.095299
குறைந்தபட்ச விலை : ரூ.51,00,000/– (ரூபாய் ஐம்பத்து ஒரு லட்சம் மட்டும்) **(பொருந்தும் TDS மற்றும் Baanknet.com கட்டணங்கள் சேர்த்து) முன்வைப்புத் தொகை : ரூ.5,10,000/–** (ரூபாய் ஐந்து லட்சத்துப் பத்தாயிரம் மட்டும்)
ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தொடர்பு எண்.: கிளை மேலாளர், போன் : 8925951189, 04254 262449, 262554

2. அன்னூர் கிளை (0007). கடன்தாரர்(கள்) & உத்தரவாதமளித்தவர்(கள்) : M/s. சாந்தி எண்டர்பிரைசஸ், தொடர்பு முகவரி : எண்.09/841/C, அய்யப்பரெட்டிபுதூர், அன்னூர், மேட்டுப்பாளையம் (அஞ்சல்), அன்னூர் – 641653. **(2) திருமதி. செல்வி.C,** க/பெ. திரு. சோமசுந்தரம், நிரந்தர முகவரி : எண்.6/168B, பூலுவபாளையம், ஒட்டர்பாளையம், கோயமுத்தூர் – 641653. **(3) திரு. சோமசுந்தரம்.P,** த/பெ. பழனிசாமி, நிரந்தர முகவரி : எண்.6/168B, பூலுவபாளையம், ஒட்டர்பாளையம், கோயமுத்தூர் – 641653. **(4) திரு. சதீஷ்குமார் சென்னையன்,** த/பெ. சென்னையன், நிரந்தர முகவரி : எண்.5/834, போயனூர், வடக்காலூர், கோயமுத்தூர் 641653. **நிலுவைத் தொகை : ரூ.1,08,47,906.47, 30.04.2026** வரை மற்றும் 30.04.2026 லிருந்து ஒப்பந்தப் பின்வட்டி, பிற செலவுகளுடன்.
சொத்து விபரம் : கோயம்புத்தூர் மாவட்டம் – 641697, அன்னூர் தாலுகா, கரியாம்பாளையம் கிராமம், பட்டா எண்.608, சர்வே எண்.317/3, கிருஷ்ணகவுண்டன்புதூர் ரோடு, இதிலமைந்த 6100 சதுரடி காலி நிலம். திரு. P.சோமசுந்தரம் மனைவி திருமதி. C செல்வியின் பெயரிலமைந்த சொத்து. (பங்குதாரர்கள்/ உத்தரவாதமளித்தவர்கள்/அடமானதாரர்கள்) எல்லைகள் : கரியாம்பாளையம்–கிருஷ்ண கவுண்டன்புதூர் தார் ரோட்டுக்கு வடக்கு, அப்பாச்சி கவுண்டர் நிலத்துக்குக் கிழக்கு, 23 அடி அகல லேஅவுட் ரோட்டுக்கு மேற்கு, விற்பனையாளரின் மீதமுள்ள நிலத்துக்குத் தெற்கு. **PROPERTY ID - IOBA0007008**
அட்சரேகை/தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 11.194374 77.076560 சுவாதீனத்தின் தன்மை : ஆக்கபூர்வ (Constructive) சுவாதீனம்
குறைந்தபட்ச விலை : ரூ.70,10,000/– முன்வைப்புத் தொகை : ரூ.7,01,000/– ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தொடர்பு எண்.: கிளை மேலாளர், போன் : 04254–262264.

வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL சட்டப்பூர்வ நிலுவைகளை விட வங்கியின் நிலுவைகளுக்கே முன்னுரிமை உண்டு.
மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகையை (இஎம்டி) ஆன்லைனில் ஏலதாரர்களின் குளோபல் EMD வாலட் கணக்கில் NEFT/RTGS வழியில் செலுத்த வேண்டும்.

இ–ஏலத் தேதி/நேரம் : 26.05.2026 (செவ்வாய்க்கிழமை);
காலை 10.30 மணி முதல் பிற்பகல் 1.30 வரை;
ஏலம் நிறைவடையும் வரை, ஒவ்வொன்றும் 10 நிமிட தன்னிச்சையான நீட்டிப்புடன்

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கும் மற்றும் சொத்துக்களின் முழுமையான விபரங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் இணையதளத்திலுள்ள லிங்கினைப் பார்வையிடவும் – **www.iob.in** [http://www.iob.in/TenderDetails.aspx?Tendertype=E_auction] அல்லது வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட இ–ஏலத்தின் சேவையாளரை **https://baanknet.com** இணையதளத்தில் தொடர்பு கொள்ளவும்.

வ.எண்.1 வ.எண்.2

இடம் : கோயம்புத்தூர்
தேதி : 07.05.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி

கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/கள் ஆகியோருக்கான, மேற்படி கடனிற்காக மேற்படி தேதியில் நடைபெறும் இ–ஏலத்திற்கான, 2002 பிணைய நலன் (அமலாக்கம்) விதிகளின் விதி 8(6) / விதி 9(1) ன் கீழான அறிவிப்பாகவும் இதனைக் கொள்ள வேண்டியது.